# ஆயிரம் வருட அரசாட்சி

# THE MILLENNIUM

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு! இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வேதாகம ஆட்சி முறைக்காலங்களைப் பற்றியதான வேதபாடங்களில் இதற்கு முன்பாக ***சீக்கிரமாய் சம்பவிக்க வேண்டியவைகள்*** என்று *வெளி 22:6* ல் குறிப்பிடப்பட்டுள்ள, **சபை எடுத்துக்கொள்ளப்படுதல்**, **அந்திக் கிறிஸ்து**, **உபத்திரவக்கால சம்பவங்கள்**, **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை**, **அர்மகெதோன் யுத்தம்**, **"புறஜாதி மக்களுக்கான நியாயத்தீர்ப்பு** போன்ற வேத பாடங்களை படித்தோம். இவற்றுக்கு அடுத்த படியாக வேதாகம சரித்திரத்தில் நடைபெறப்போகும் சம்பவம் **"ஆயிர வருட அரசாட்சி"**. இந்த வேதபாடத்தில், **இயேசு கிறிஸ்துவால் ஆளப்படும் இந்த அதி உன்னத அரசாட்சி**யைப்பற்றி படிப்போம்.

***வெளி 20:5 மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்.***
***6. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.***

**"ஆயிரம் வருஷம்"** என்ற வார்த்தை ***வெளி 20:1-7*** ல் 6 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.
ஆங்கிலத்தில் இக்காலம் **"Millennium"** என்று அழைக்கப்படுகிறது ( from two latin words, **mille** – thousand, **annum** – year ).
இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், சாத்தான் கட்டப்பட்டு, அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும், அவர்களது சேனையும் அழிக்கப்பட்டு, புறஜாதிகள் நியாயந்தீர்க்கப்பட்டு, நித்திய அக்கினியில் போடப்பட்ட பிறகு, இயேசு கிறிஸ்து தன் பரிசுத்தவான்களோடு பூமியில் 1000 வருடங்கள் ஆளுகை செய்யும் மகிழ்ச்சியான காலம். மனிதனின் சாபம் முழுமையாக நீக்கப்படுவதற்கு முன்பு இருக்கும் கடைசி ஆட்சிக்காலமாக இக்காலம் இருக்கும் *(வெளி 22:3 ). வேதாகம ஆட்சி முறைக்காலங்களில்* ***( Biblical Dispensations )*** இது இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் புதிய வானம் புதிய பூமிக்கும் இடைப்பட்ட காலம் ***( வெளி 20:1-7 ).***

சந்தோஷம், சமாதானம், நிம்மதி, பாதுகாப்பு, எல்லாவற்றிலும் செழிப்பு, ஆரோக்கியம், அன்பு.............. போன்றவை மாத்திரம் நிறைந்து இருக்கின்ற ஒரு வாழ்வை, ஆதிகாலத்தில் இருந்தே மனிதன் எதிர்பார்த்துக்கொண்டேதான் இருக்கிறான். கற்பனை செய்து பார்த்தும், கதைகளாகப்படித்தும், கனவு கண்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறான். பல மனிதர்கள் இவை அனைத்தையும் கொடுப்போம் என்று வாக்கு செய்தாலும் இப்படி ஒரு காலம் இதுவரை இருந்தது இல்லை. மனித மனங்களில் தேவன் வைத்திருக்கும் இந்த எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் நிறைவேற்றும் ஒரே காலம் **"ஆயிர வருட அரசாட்சி"** காலமாக மாத்திரம்தான் இருக்கும்.

## வேதாகமத்தில் இக்காலத்துக்கான மற்ற பெயர்கள்

1. இயேசுவின் ஆயிரம் வருட அரசாட்சி ***( வெளி 20:2,4,5,6,7).***
2. காலங்கள் நிறைவேறும் ஆட்சிமுறைக்காலம் ***( எபே 1:10 ).***
3. கர்த்தரின் நாள். தீர்க்கதரிசிகளின் புத்தகங்களில் பலமுறை **"அந்த நாள்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது
   ***ஏசா 2:11; 4;1; 19:21; 24;21; 26:1; எசே 39:22; 48:35 ).***
4. மறுமை ***( மத் 12:32; மாற்கு 10:30; எபே 1:21; 2:7; 3:21 ).***
5. இயேசுவினுடைய, தேவனுடைய ராஜ்யம் ***( எபே 5:5; 2 தீமோ 4:1; வெளி 11:15 ).***
6. தேவனுடைய ராஜ்யம் ***( மாற்கு 14:25; லூக்கா 19:11; 22:14-18 ).***
7. பரலோக ராஜ்யம் ***( மத் 3:2; 4:17; 7:21; 8:11; 10:7; 18:1-4 ).***
8. மறுஜென்ம காலம் ***( மத் 19:28 ).***
9. எல்லாம் நிறைவேறித்தீரும் காலங்கள் ***( அப் 3:20-21 ).***
10. இஸ்ரவேலின் ஆறுதல் ***( லூக்கா 2:25 ).***
11. எருசலேமின் மீட்பு ***( லூக்கா 2:38 ).***
12. தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யம் ***( கொலோ 1:13; 2 பேதுரு 1:11).***

## இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியில் தேவனுடைய 10 நோக்கங்கள்


1. உலகத்தில் கீழ்ப்படியாமையை முழுவதும் ஒழித்து, தேவன் எல்லாவற்றிலும் எல்லாமாக, லூசிபரின், ஆதாமின் கீழ்ப்படியாமைக்கு முன்பு இருந்தது போல இருப்பது ***( 1 கொரி 15:24-28; எபி 2:7-9; எபே 1:10).***
2. ஆபிரகாமோடு, ஈசாக்கோடு, யாக்கோபோடு, தாவீதோடு, மற்றவர்களோடு ஏற்படுத்திய **நித்திய உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது** ***( ஆதி 12, 13, 15, 17, 26, 28 அதிகாரங்கள், 2 சாமு 7; மத் 26:28; 2 கொரி 3:6-15; எபி 7, 8, 9,10 ம் அதிகாரங்கள்.)***
3. பரிசுத்தவான்களுக்கும் இயேசுவுக்குமாக பழிவாங்கி அவர்களை நிலை நிறுத்துவது ***( மத் 26:63-66; ரோமர்12:19; சங் 2; ஏசா 63;வெளி1:7; 6:9-11;19:1-10; 1பேதுரு 1:10-12; 2தீமோ4:7-8; ரோமர்8:17-21 ).***
4. இஸ்ரவேலை நிலைப்படுத்தி அதை மற்ற நாடுகளின் பிடியில் இருந்து விடுவித்து அதை எல்லா நாடுகளின் நித்திய தலைமையிடமாக வைப்பது ***( அப் 15:13-18; மத் 24:31; ஏசா 11:10-12; எசே 20:33-44; உபா 28 )***
5. அனைத்து காலங்களிலுமுள்ள அனைத்து விசுவாசிகளையும் ராஜாக்களாக ஆசாரியர்களாக அவர்களது கிரியைகளுக்கு தக்கதாக உயர்த்துவது. ***( ரோமர் 8:17-21; 14:10; 2 கொரி 5:10-11; பிலி 3:20-21; கொலோ 3:4; 1 பேதுரு 1:10-13; 5:1-4; வெளி 1:5; 2:26-27; 5:10; 11:15-18; 12:5; 20:4-6 ).***
6. இயேசுவுக்குள் அனைத்தையும் கூட்டுவது ***( எபே 1:9 ).***
7. புறஜாதிகளை நீதியாய் நியாயந்தீர்த்து, பூமியை அதன் அசல் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது ***( ஏசா 2:2-4; 11:1-11; மத் 25:31-46; தானி 7:9-27 ).***
8. தேவன் முன்பு திட்டமிட்டபடி, ஒரு நீதியான நித்தியமான ஆளுகையை மீண்டும் கொண்டு வருவது ***( ஏசா 9:6-7; 11:1-9; 42:1-5; தானி 2:44-45; 7:13-27; லூக்கா 1:32-33; வெளி 11:15;20;4-6;22:4-5 ).***
9. மேசியாவின் நித்திய ஆளுகையைப்பற்றியதான நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவது ***( தானி 9:24; 1 பேதுரு 1:10-13; அப் 3:20-21 ).***
10. பாவம் உலகத்தில் நுழைவதற்கு முன்பு இருந்த நிலைமைக்கு அனைத்தையும் மீண்டும் கொண்டு வருவது ***( அப் 3:20-21; ஏசா 66:22-24; 2 பேதுரு 3:10-13; வெளி 21-22 ).***

## ஆயிர வருட அரசாட்சியின் சிறப்பு அம்சங்கள்



### பூமியில் நிஜமாக நடக்கும் அரசாட்சி ***( ஏசாயா 9:6-7; தானி 2:44-45; 7:13-27; சக 14; லூக்கா 1:32-33; வெளி 5:10; 11:15; 20:1-10; 22:4-5).***

***தானி 2:44*** *அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.*



ஆயிர வருட அரசாட்சி வெறும் கற்பனை அட்சி அல்ல. ஆவிக்குரிய உலகத்தில் மாத்திரம் நடக்கும் ஆட்சியும் அல்ல. **அது பூமியில் நிஜமாக நடைபெறும் ஆட்சி.** தானியேலின் புஸ்தகத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள படி, இதற்கு முன்பு எப்படி பல ஆட்சிகள் மனிதனால் ஆளப்பட்டதுவோ, அது போல இந்த ஆட்சி இயேசு கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டு அவரால் ஆளுகை செய்யப்படும். **"கையால் பெயர்க்கப்படாமல் மலையில் இருந்து பெயர்ந்து உருண்டு வரும் கல்",** இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இயேசு கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்படும் அவரது **நித்திய தேவனுடைய அரசாட்சியை** குறிப்பிடுகிறது.



### சாத்தானும் அவனது அசுத்த ஆவிகளும் கட்டப்பட்டிருத்தல் *( வெளி 20:1-10 ).*

***வெளி 20:2*** *பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்.*

இக்காலம் முழுவதும் சாத்தான் பாதாளத்தில் அடைத்து வைக்கப்பட்டிருப்பான். அவனோடு கூட அசுத்த ஆவிகளும், சாத்தானின் தூதர்களும் அடைக்கப்படுவார்கள் *( ஏசாயா 24:21-22 ).* சாத்தானும் அவனது அசுத்த ஆவிகளும் பூமியில் இல்லாமல் இருப்பதனால், மனிதனை பாவம் செய்வதற்கு ஏதுவாக தூண்ட முடியாது. இதனால் பாவம் செய்வதற்கு ஏதுவான சூழ்நிலைகள் அதிகமாக இல்லாமல் இருக்கும். உலகத்தில் சமாதானமும், நிம்மதியும் நிறைந்திருக்கும்.



### இது ஒரு தெய்வீக அரசாட்சி *( ஏசா 2:2-4; எசே 43:7; தானி 2:44-45; சக 14:1-21; மத் 25:31-46; வெளி 20:1-10 ).*

***சக 14: 9*** *அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்*

***ஏசாயா 11; 3*** *கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும்,*

*4 நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். 5 நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்.*



இந்த ஆட்சி ஒரு ஜனநாயக ஆட்சியோ, சர்வாதிகார ஆட்சியோ, மக்கள் ஆட்சியோ அல்லாமல் இயேசுகிறிஸ்துவால் ஆளுகை செய்யப்படும் **இறையாட்சியாக** இருக்கும். இங்கு இயேசு கிறிஸ்துவின் சட்டங்களும் நீதியும் மாத்திரமே செயல்படுத்தப்படும். இயேசுவின் சட்டங்களுக்கு உட்பட்டே சகலமும் நடக்கும். இயேசுவின் நீதியின் படி நியாயத்தீர்ப்பு நடக்கும். நீதியும் சத்தியமும் நிறைந்த தெய்வீக ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கும்.




### தேவனின் கீழ், இயேசு கிறிஸ்து ஆளுகை செய்வார் *( ஏசா 9:6-7; தானி 7:13-14; லூக்கா 1:32-33 ).*

***லூக்கா 1: 32*** *அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். 33 அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.*

இயேசுகிறிஸ்து ராஜாதிராஜாவாக இருந்து ஆளுகை செய்யும் காலமாக இது இருக்கும். தேவனின் கீழ் இயேசு கிறிஸ்து ஆளுகை செய்வார். சகல அதிகாரமும் இயேசுவிடமே இருக்கும். இயேசுவின் நேரடிப்பார்வையின் கீழ் உலகம் ஆளப்படும்.



### இஸ்ரவேல் முழுவதையும் தாவீது ராஜா, இயேசுவின் கீழ் ஆளுகை செய்வார் *( எரே 30:9; எசே 34:24; 37:24-28; ஓசியா 3:4-5 ).*

***எசே 37: 24*** *என் தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள்மேல் ராஜாவாக இருப்பார்; அவர்கள் எல்லாருக்கும் ஒரே மேய்ப்பர் இருப்பார்; அப்பொழுது அவர்கள் என் நியாயங்களில் நடந்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படியே*



*செய்து, 25 நான் என் தாசனாகிய யாக்கோபுக்குக் கொடுத்ததும், உங்கள் பிதாக்கள் குடியிருந்ததுமான தேசத்திலே குடியிருப்பார்கள்; அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்; என் தாசனாகிய தாவீது என்பவர் என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார்.*

உலக முழுவதற்கும் இயேசு கிறிஸ்து தலைவராக இருப்பார். இயேசு கிறிஸ்துவின் கீழ் தாவிது ராஜாவாக **இஸ்ரவேல் ஜனங்களை மாத்திரம்** ஆளுகை செய்வார். இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் நேரடி ஆளுகையின் கீழ் மாத்திரம் இருப்பார்கள்.



## அப்போஸ்தலர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோத்திரத்தை ஆளுகை செய்வார்கள் *( மத் 19:28; லூக் 22:30 ).*

***மத் 19: 28*** *அதற்கு இயேசு: மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

இயேசு கிறிஸ்துவின் பன்னிரண்டு **சீஷர்களில்** ஒவ்வொருவரும், இஸ்ரவேலின் 12 கோத்திரங்களில் ஒன்றை ஆளுகை செய்வார்கள். தாவீது ராஜாவின் கீழ் இவர்களில் ஒவ்வொருவரும் ஒரு கோத்திரத்துக்கு தலைவனாக இருந்து ஆளுகை செய்வார்கள்.



## அனைத்து பரிசுத்தவான்களும், ராஜாக்களாக ஆசாரியர்களாக ஆளுகையில் பங்கேற்பார்கள் *( வெளி 2:26-27; 11:15; 20:4-10; 22:5; தானி 7:18).*

***வெளி 5:10*** *எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.*

பூமியில் இயற்கையில் இருக்கும் மக்களை, பரிசுத்தவான்கள் இயேசுவின் கீழ் ஆளுகை செய்வார்கள். அனைத்து பரிசுத்தவான்களும் இயேசுவின் கீழ் **ராஜாக்களாக, ஆசாரியர்களாக** ஆளுகை செய்வார்கள். பரிசுத்தவான்களுக்கு ராஜ்யங்களின் மேல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் *( வெளி 2:26 ).* இயேசு கிறிஸ்து பூமியை நீதியாய் ஆளுவதற்கு இவர்கள் உதவியாக இருப்பார்கள்.



## எருசலேம் உலகத்தின் தலைநகரமாக இருக்கும் *( ஏசா 2:2-4; எசே 48; சக 14 ).*

***ஏசாயா 2: 2*** *கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.*

எருசலேம் நகரம் முழுவதுமாக ஸ்தாபிக்கப்பட்டு உலகத்தின் **தலைநகரம்** ஆக்கப்படும். எருசலேம் ஒரு பாதுகாப்பான நகரமாக இருக்கும். இங்கிருந்துதான் உலகம் முழுவதற்கும் சட்டங்கள் கொடுக்கப்படும். *( ஏசாயா 2:3; மீகா 4:2 ).* முக்கிய அரசாங்க பணிகளுக்காக அனைத்து மக்களும் எருசலேமுக்குத்தான் வருவார்கள்.



## எருசலேமில் இயேசு இருந்து ஆளுகை செய்வார்

***சக 2: 12*** *கர்த்தர் பரிசுத்த தேசத்திலே யூதாவாகிய தமது பங்கைச் சுதந்தரித்து, திரும்பவும் எருசலேமைத் தெரிந்துகொள்வார்.*

இப்பொழுது இஸ்ரவேல் தேசம் **"holy land"** **"பரிசுத்த தேசம்"** என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. ஆனால் வேதாகமத்தில் இந்த ஒரு இடத்தில்தான் *( சக 2:12 )* இஸ்ரவேல் தேசம் 'பரிசுத்த தேசம்" **"holy land"** என்று

குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இஸ்ரவேலில் இருந்து பாவத்தையும் அழுக்கையும் போக்க ஒரு ஊற்று திறக்கப்படும். அதன் பின் இஸ்ரவேல் தேசமும் அதன் மக்களும் உண்மையில் பரிசுத்தமாக இருப்பார்கள். அப்போது அந்த தேசம் "பரிசுத்த தேசம்" **"holy land"** என்று அழைக்கப்படுவதற்கு முழுமையாக தகுதி உடையதாக இருக்கும் ***( சக 3:9; 12:10 - 13:1; ரோமர் 11:25-29 )***



**எருசலேம் நிலப்பரப்பில் மாற்றங்கள்** ***( சக 14:4-5; 8:1-3; மீகா 4:1-3; எசே 40 - 48 )***

*சக 14:10 தேசமெல்லாம் கேபாதொடங்கி எருசலேமுக்குத் தெற்கே இருக்கிற ரிம்மோன்வரைக்கும் சமபூமியாகத் திருத்தப்படும்; எருசலேமோ உயர்ந்ததாகி, தன் ஸ்தானத்திலே பென்யமீன் வாசல் தொடங்கி முதல்வாசலென்கிற ஸ்தலமட்டும் கோடிவாசல் வரைக்கும், அனானெயேல் கோபுரம் துவக்கி ராஜாவின் திராட்ச ஆலைகள்மட்டும் குடியேற்றப்பட்டிருக்கும்.*
*11 அதிலே ஜனங்கள் வாசம்பண்ணுவார்கள்; இனிச் சங்கரிப்பில்லாமல் எருசலேம் சுகமாய்த் தங்கியிருக்கும்.*



எருசலேமில் நிலப்பரப்பு சமபூமியாக திருத்தப்படும். இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது ஏற்படும் பூமியதிர்ச்சியினால் பல மாற்றங்கள் எருசலேமில் சம்பவிக்கும். அதனோடு கூட முக்கிய இரண்டு மாற்றங்கள் சம்பவிக்கும்.

1. எருசலேமை சுற்றி இருக்கும் நிலப்பரப்பு சமவெளியாக ஆக்கப்படும்.
2. எருசலேம் அதன் சுற்றுப்புறங்களை விட உயர்த்தப்படும்.

இயேசு கிறிஸ்து வாசம்பண்ணுவதால் எருசலேம் பாதுகாப்பாக, ஜனங்கள் சுகமாக வாழுவதற்கு ஏதுவான நகரமாக இருக்கும்.



**இயேசுவோடு பல தேச மக்கள் வசிப்பார்கள்**

*சக 2:11 அந்நாளிலே அநேகம் ஜாதிகள் கர்த்தரைச் சேர்ந்து என் ஜனமாவார்கள்; நான் உன் நடுவில் வாசமாயிருப்பேன்; அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உன்னிடத்தில் அனுப்பினாரென்று அறிவாய்.*

பூமியில் மேசியா மனிதரோடு அவர்கள் மத்தியில் வாழும்போது, இயேசுவோடும் இஸ்ரவேலோடும் பல தேசத்து மக்கள் சேர்ந்து வாழுவார்கள். இஸ்ரவேல் அல்லாத பல தேச மக்கள் இயேசுவோடு வசிப்பார்கள்.

***( தானி 7:13-14; சக 14; வெளி 20:1-10 )***



**இது உலகளாவிய அரசாங்கமாக இருக்கும்** ***( வெளி 11:15; தானி 2:44-45; 7:13-27; சக 14 ).***

*சக 14: 9 அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்*

அர்மகெதோன் யுத்தம் முடிந்து இயேசுவின் ஆயிர வருட ஆட்சி தொடங்கும்போது, பூமியின் அரசாங்கங்கள் எல்லாம் பரிசுத்தவான்களிடத்தில் கொடுக்கப்படும் ***( தானி 7:27 ).*** இயேசு கிறிஸ்து உலகம் முழுவதற்கும் ராஜாவாக இருப்பார். அவரது அரசாங்கம் உலகளாவிய அரசாங்கமாக இருக்கும். பூமியெங்கும் ஒரே அரசாட்சி இருக்கும். அனைத்து மக்களும் இந்த அரசாட்சியின் கீழ் இருப்பார்கள்.




**யார் இதை சுதந்தரித்துக்கொள்ள முடியாது** ***( 1 கொரி 6:9; கலா 5:19-21 ).***

*கலா 5: 19 மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், 20 விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், 21 பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள்*

*தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பவர்களும், ***1 கொரி 6:9*** ல் குறிப்பிடப்பட்டிருப்பவர்களும் ஆயிர வருட அரசாட்சியை சுதந்தரித்துக்கொள்ள முடியாது. இப்படிப்பட்டவர்கள் ஆயிர வருட அரசாட்சிக்குள் நுழைய முடியாது.




**சிலருக்கு இதில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கும்** ***( மத் 5:20; 13:39-50; 24:45-51; 25:31-46; வெளி 14:9-11 ).***

***மத் 5: 20*** *வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.*




**நீதிமான்கள் அல்லாதவர்கள்,** ***மத் 13:39-50*** ல் குறிப்பிடப்பட்டிருக்கும் **“களைகள்”,** ***மத் 24:45-51*** ல் குறிப்பிடப்பட்டிருக்கும் **“வேலைக்காரர்கள்”,** ***மத் 25:31-46*** ல் குறிப்பிடப்பட்டிருக்கும் **“வெள்ளாடுகள்”,** ***வெளி 14:9-11*** ல் குறிப்பிடப்பட்டிருக்கும் **அந்திக்கிறிஸ்துவின் முத்திரையை தரித்தவர்கள்** போன்றவர்களுக்கு ஆயிர வருட அரசாட்சியில் அனுமதி மறுக்கப்படும். இவர்கள் ஆயிர வருட அரசாட்சியில் பிரவேசிக்க முடியாது.

**மரித்துப்போன பாவிகள்** மீண்டும் ஆயிரம் வருஷ அரசாட்சியில் வாழும்படியாக உயிர்த்தெழ அனுமதிக்கப்பட மாட்டார்கள் ***( வெளி 20:4-6, 11-15; எபி 9:27 ).***

இயேசுவின் இரண்டாம் வருகையில் நடக்கும் **‘ அப்போது வாழுகிற ஜனங்களின் ( புறஜாதிகளின், இஸ்ரவேல் அல்லாத மக்களின் ) நியாயத்தீர்ப்பில்’,** யார் யார் ஆயிரம் வருட அரசாட்சியில் வாழுவார்கள் என்று தீர்மானிக்கப்படும் ***( மத் 25:31-46 ).***




***மத் 25: 34*** *அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.*

*41 அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அர்மகெதோன் யுத்தத்துக்கு பின் அப்போது பூமியில் மீதி வாழ்ந்து கொண்டிருக்கிற ஜனங்களுக்கான நியாயத்தீர்ப்பு இயேசு கிறிஸ்துவினால் நடத்தப்படும். அந்த நியாயத்தீர்ப்பில் யார் ஆயிர வருட அரசாட்சியில் பிரவேசிப்பார்கள், யார் பிரவேசிக்க மாட்டார்கள் என்று தீர்மானிக்கப்படும். ஆயிர வருட அரசாட்சியில் அனுமதி மறுக்கப்பட்டவர்கள் நரகத்துக்கு நித்திய அக்கினியில் வேகும்படியாக நியாயந்தீர்க்கப்பட்டு அனுப்பப்படுவார்கள்.




**வருடத்துக்கு ஒரு முறையாவது மக்கள் எருசலேமுக்கு வர வேண்டும்** ***( சக 14:16-21; ஏசாயா 2:1-4; 35:8-9 ).***

***சக 14:16*** *பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்.*



எல்லா நாடுகளும், வருடத்துக்கு ஒரு முறை **அவர்கள்** அல்லது அவர்களது **பிரதிநிதிகளை** எருசலேமுக்கு அனுப்பி இயேசுகிறிஸ்துவை தொழுது கொள்ள வேண்டும். இயேசுவின் ஆளுகைக்குள் தாங்கள் பூரணமாக கட்டுப்பட்டு இருக்கிறோம் என்பதை வெளிக்காட்ட வேண்டும். ஆலோசனைகளையும் ஆணைகளையும் பெற்றுச்செல்ல வேண்டும். இது எல்லா வருடமும் நடக்க வேண்டும்.



**சமுதாய, ஆவிக்குரிய சட்டங்கள்** *( ஏசா 2:2-4; 9:6-7; 11:3-5; 65:20; சக 14:16-21; 1 கொரி 15:24-28 ).*

*ஏசாயா 2:3 திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.*

எல்லா நாடுகளும் கடைபிடிக்க வேண்டிய பொதுவான சமுதாய, ஆவிக்குரிய சட்டங்கள் எருசலேமில் இருந்து இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்படும். அவர்கள் அவற்றை நிச்சயமாக கடைப்பிடிக்க வேண்டியதாக இருக்கும்.



**சட்டம் ஒழுங்கு பூரணமாக நிலை நிறுத்தப்படும்**

*ஏசாயா 2:4 அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.*

தவறுக்கு நீதியான நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படும். மனிதர்கள் மற்றவர்களுக்கு விரோதமாக எக்காரியத்தையும் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. ஆதலால் சண்டை, விரோதம் இன்றி ஒருவருக்கொருவர் சமாதானமாக, பாதுகாப்பாக ஜீவிப்பார்கள்.



**வாக்குத்தத்த தேசம் முழுவதும் இஸ்ரவேலுக்கு கொடுக்கப்படும்**

*ஏசாயா 60:21 உன் ஜனங்கள் யாவரும் நீதிமான்களும், என்றைக்கும் பூமியைச் சுதந்தரிக்குங் குடிகளும், நான் நட்ட கிளைகளும், நான் மகிமைப்படும்படி என் கரங்களின் கிரியைகளுமாயிருப்பார்கள்.*

தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் முழுவதும் முதன் முதலாக இஸ்ரவேலுக்கு கொடுக்கப்படும். அவர்கள் நித்தியமாக அதை சுதந்தரித்துக்கொள்வார்கள். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி ஒவ்வொரு கோத்திரமும் அதற்கு ஒதுக்கப்பட்ட இடம் முழுவதையும் சுதந்தரித்து, அவற்றில் வாழுவார்கள் *( ஆதி 15:14-18; 17:6-19; ஏசாயா 60;20; எசே 47:13-48:35 ).*



**மற்ற தேசங்கள் அந்தந்த மக்களுக்கு கொடுக்கப்படும்**

*அப் 17:26 மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்;*

*ஏசாயா 2:4 அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.*

தேவன் ஒவ்வொரு நாட்டுக்கும் இனத்துக்கும் கொடுத்த பூமியின் பாகங்களில், இஸ்ரவேல் அல்லாத மற்ற நாடுகள் எல்லாம் முறையாக அமைந்திருக்கும். எல்லைத்தகராறு, சுயநலத்தால் தகராறு போன்றவை இருக்காது *( உபா 32:8; தானி 7:14; அப் 17:26 ).*



**வருங்கால எருசலேம் தேவாலயம் - உலகத்தின் தலைநகரக்கட்டிடமாக இருக்கும்** *( எசே 43:7; சக 6:12-13 ).*



*சக 6:13 அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்; அவர் மகிமைபொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார்; இவ்விரண்டின் நடுவாகச் சமாதானத்தின் ஆலோசனை விளங்கும்.*

இயேசு கிறிஸ்து எருசலேம் தேவாலயத்தில் இருந்து ஆளுகை செய்வார். அவர் ராஜாவாகவும், பிரதான ஆசாரியராகவும் இருப்பார். ஆகவே எருசலேம் தேவாலயம் **தேவாலயமாகவும்,** **உலகத்தின் தலைநகரக்கட்டிடமாகவும்** இருக்கும்.

## எருசலேம் தேவாலயத்தில் லேவியர்களும் ஆசாரியர்களும் ஊழியம் செய்வார்கள் *( ஏசாயா 66:19-24; எசே 43:19-27; 44: 9-31 ).*



*ஏசாயா 66: 20 இஸ்ரவேல் புத்திரர் சுத்தமான பாத்திரத்தில் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருகிறதுபோல, உங்கள் சகோதரரெல்லாரையும் அவர்கள் குதிரைகளின்மேலும், இரதங்களின்மேலும், குலாரிவண்டில்களின்மேலும், கோவேறுகழுதைகளின்மேலும், வேகமான ஒட்டகங்களின்மேலும், சகல ஜாதிகளிடத்திலுமிருந்து எருசலேமிலுள்ள கர்த்தருக்குக் காணிக்கையாக என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*21 அவர்களிலும் சிலரை ஆசாரியராகவும் லேவியராகவும் தெரிந்துகொள்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

பழைய ஏற்பாட்டின் காலத்தில் இருந்தது போன்ற **ஆசாரியர்கள், லேவியர்கள்** எருசலேம் தேவாலயத்தில் ஊழியம் செய்வார்கள். *எசே 44: 15-16* ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல, சாதோக்கின் புத்திரராகிய லேவியர்கள் பொறுப்பான பதவிகளில் இருந்து ஊழியம் செய்வார்கள்.



## பழைய ஏற்பாட்டு பலிகள், பண்டிகைகள், சடங்குகள்.

*ஏசாயா 56: 7 நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்.*



பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள **பலிகள், சில பண்டிகைகள், தேவாலயச்சடங்குகள்** அனைத்தும் நித்தியமாக தொடர்ந்து நடக்கும். இயேசு கிறிஸ்து அவைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எவ்வாறு மாதிரிகளாக இருந்ததோ அதுபோலவே இயேசு கிறிஸ்துவின் நித்திய பிராயச்சித்தபலியை நினைவு கூறுவதற்கும், அன்பை பகிர்ந்து கொள்வதற்குமாக தொடர்ந்து இருக்கும் *( எசே 43:19-27; 44:5,30; 45:17-25; 46:1-24; சக 14:16-21; ஏசாயா 66:19 – 24 : எசே 40 - 48 அதிகாரங்கள் ).* பழைய ஏற்பாட்டு பண்டிகைகளில், **பஸ்கா பண்டிகையும்** *( எசே 45:21-24 ),* **கூடாரப்பண்டிகையும்** *( சக 14:16-19 )* நித்தியமாக தொடர்ந்து கொண்டாடப்படும் எனவும் சில வேதபண்டிதர்கள் கருதுகின்றனர்.

## சவக்கடல் நதியால் இணைக்கப்பட்டு மீன்களால் நிறைந்திருக்கும்



*சக 14;8 அந்நாளிலே ஜீவதண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரிகாலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும்.*

**கிழக்கு சமுத்திரம்** என்பது, ஒலிவ மலைக்கும் கிழக்கே இருக்கிற **சவக்கடல். சமுத்திரம்** என்பது ஒலிவ மலைக்கும் மேற்கே இருக்கிற **மத்தியத்தரைக்கடல்.**

எருசலேமுக்கு சற்று வடக்கில் அமைந்திருக்கும் தேவாலயத்தின் வாசல்படியின் கீழிருந்து புறப்படும் நதியானது, தெற்காக நகரத்தின் வழியாக பாய்ந்து பின் இரண்டாக பிரியும். ஒரு பாதி மத்தியதரைக் கடலுக்கும் மற்றொரு பாதி

சவக்கடலுக்கும் செல்லும். இதன் அகலம் சுமார் 2.6 மைல்கள் இருக்கும் *(எசே 47:3-5).* கோடைகாலத்திலும் குளிர்காலத்திலும் அது பாய்ந்து அது செல்லுமிடமெல்லாம் ஆரோக்கியத்தையும் ஜீவனையும் கொடுக்கும் *( எசே 47:1-12 ).* இந்த நதி பாய்வதன் ஒரு நோக்கம் என்னவென்றால், அது சவக்கடலில் பாய்ந்து சவக்கடலை குணமாக்கும். இதனால் சவக்கடலுக்கும் மத்தியதரைக் கடலுக்கும் ஒரு இணைப்பு உண்டாகும். அப்போது சவக்கடல் முழுவதும் மீன்களால் நிறைந்திருக்கும் *( எசே 47:8-10 ).*



------------------------

**என்ன ஒரு அற்புதமான ஆட்சி....... என்ன ஒரு விசேஷமான வாழ்க்கை..........**

**பிதாவின் கீழ், இயேசுவின் ஆட்சியினுள் இந்த அரசாட்சியில் நித்தியமாக இயேசுவோடு வாழுவதற்காகத்தான் நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.**
**சாத்தானின் கீழ், அந்திக்கிறிஸ்துவோடு, மற்ற அவ்விசுவாசிகளோடு நித்தியமாக நரக அக்கினியில் வேகுவதற்காக நாம் சிருஷ்டிக்கப்படவில்லை.**

**ஆனாலும் இப்போது நாம் வாழுகிற வாழ்க்கையில் நாம் எடுக்கும் தீர்மானங்களும், செய்யும் செயல்களும், மரணத்துக்குப்பின் நாம் -**

**" ராஜாதி ராஜா இயேசுவின் கீழ் ராஜாக்களாய் நித்தியமாக ஆளப்போகிறோமா ?"**

**" சாத்தானோடும் அவன் தூதர்களோடும் நித்தியமாய் நரகத்தில் வேகப்போகிறோமா ?"**

**என்று தீர்மானிக்கும்.**

**ஆயிர வருட அரசாட்சியில் இயேசுவின் ராஜாக்களாக, அவரது முகம் பார்த்து, அவரது குரல் கேட்டு, அவரது நேரடி அன்பு கட்டளைகளை செயல் படுத்தி ஆளுகை செய்து நித்தியமாக வாழ.............**

**ஆயத்தமாயிருப்போம்,**
**மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்.**

**ஆமென்.**

***குறிப்பு:*** இதன் தொடர்ச்சியாக - ஆயிர வருட அரசாட்சி ( இரண்டாம் பாகம்), கோக் மகோக் யுத்தம், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, புதிய வானம் புதிய பூமி, புதிய எருசலேம் - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள்.
இதற்கு முன்பு தொடர்ச்சியாக வேதாகம ஆட்சி முறைக்காலங்கள், சபை எடுத்துக்கொள்ளப் படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அர்மகெதோன் யுத்தம், புறஜாதிகளுக்கான நியாயத்தீர்ப்பு ஆகிய வேதபாடங்கள் வெளியிடப்பட்டுள்ளன. படித்து பயனடையுங்கள்.

**நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**
If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com Ph: 968 25572195, 99663557.

**Resources;** International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament) etc. All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses may be above or below than the mentioned English Bible verse.

------------------------